(ஆ) இவைகளில் எத்தனை தொழிற்சாலைகள் மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் அனுமதி (உரிமம்) பெற்றுள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) 122.

(ஆ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து அனுமதிச் சான்றிதழ் பெற்ற தொழிற்சாலைகள் 73. மேலும், அனுமதிச் சான்றிதழ்களுக்குரிய விண்ணப்பங்களை 49 தொழில் நிலையங்களிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

4. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுத்து, உங்களுக்கு அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாளை அதை எடுத்துக் கொள்ளலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) அதை நீங்கள் என் அறையிலேதான் கேட்க வேண்டும்; உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் அப்படிச் சொன்னால், விதிப்படி ஒரு மணி நேரத்திற்கு முன்னர் அதைக் கொடுக்கவில்லை; உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை; நான் அனுமதி மறுத்திருக்கிறேன். நான் அனுமதி மறுத்த பிரச்சினையை என்னுடைய அறையிலே வந்து நீங்கள் கேட்கலாம். நாளை அந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : ஒரு முக்கியமான பிரச்சினை. ஒரு காவல் துறை அதிகாரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளை அதை எடுத்துக் கொள்ள இருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் விதிப்படி பேச வேண்டும். (குறுக்கீடு) உட்காருங்கள். என்னுடைய அறையிலே வந்து பேசுங்கள்.

முற்பகல் 11–10.

## 5. அறிவிப்புகள்.

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாற்றுத் தலைவர்கள் பட்டியல். சட்டமன்ற பேரவை விதிகளின் 9 (1)-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன் :

(1) திரு. ம. சின்னசாமி

(2) திரு. வ. சத்தியமூர்த்தி

(3) திரு. ஆர். சிங்காரம்

(4) திரு. வே. தம்புசாமி

(5) திரு. நா.சா. பழனிசாமி

## 6. கண்டனம்.

அவை உரிமை மீறலுக்காக ''முரசொலி'' ஆசிரியர் திரு. எஸ். செல்வம் அவர்களுக்குக் கண்டனம் தெரிவித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் உரிமையை மீறியதற்காகக் கண்டனம்.

பேரவையின் உரிமையை மீறியதற்காக ஒருவர் கண்டிக்கப்படுகிறபோது அவையின் இறையாண்மையையும், மாண்பையும் உணர்த்திடும் வகையில் தண்டனை நிறைவேற்றப்படும் வரையில், தண்டனையின் முக்கியத்துவத்தைக் கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் துளியும் சத்தமின்றி அமைதி காக்க வேண்டும்.

மார்ஷல், பத்திரிகை ஆசிரியர் திரு. செல்வம் ஆஜராகி உள்ளாரா ?

(மார்ஷல் : ஆம் ஐயா, ஆஜராகி உள்ளார்.)

திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர்.